**இலங்கை அங்கவீனர்களின் விளையாட்டுக்கள் தொடர்பான தேசிய சம்மேளனம் - 2024**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

இலங்கை அங்கவீனர்களின் விளையாட்டுக்கள் தொடர்பான தேசிய சம்மேளனத்தின் (சம்மேளனம்) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் வருமான செலவுக் கணக்கு, திரண்ட நிதியங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள், பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் மற்றும் 1993 இன் 47 ஆம் இலக்க (திருத்தப்பட்ட) விளையாட்டு அதிகாரச்சட்டத்தின் 9 ஆம் பிரிவினால் திருத்தப்பட்ட 1973 இன் 25 ஆம் இலக்க விளையாட்டு அதிகாரச்சட்டத்தின 21அ பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து சங்கத்தின் அதனுடன் கூடிய நிதிக்கூற்றுக்கள் குறித்து நான் எவ்வித அபிப்பிராயத்தையும் தெரிவிக்கவில்லை. இந்த நிதிக்கூற்றுக்கள் குறித்த கணக்காய்வு அபிப்பிராயத்துக்கு அடிப்படையை வழங்க போதுமான பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த முக்கிய விடயங்கள் அடிப்படையில் நிதி நிலைமைக் கூற்றில், நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்கப்பட்ட பொருண்மையான உருப்படிகள் மாற்று முறைமைகள் மூலம் உறுதிப்படுத்துவதற்கு அல்லது மெய்மையாய்வு செய்வதற்கு முடியாதிருந்தது.
இதன் காரணமாக, நிதி நிலைமைக் கூற்றில், நிதிச் செயலாற்றல் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் உள்ள பெறுமதிகள் அல்லது உருப்படிகளில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத பெறுமதிகள் அல்லது கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் சீராக்கம் செய்வது அவசியமானதென நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வியாபாரங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க (எஸ்எம்ஈஎஸ் களுக்கான எஸ்எல்எவ்ஆர்எஸ்) தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சம்மேளனத்தின் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது சம்மேளனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் சம்மேளனம்

தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சம்மேளனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சம்மேளனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வின் அடிப்படையில் சங்கத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளரின் அறிக்கையை வழங்குவது எனது பொறுப்பாகவுள்ளது. எவ்வாறாயினும், 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்கள் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையொன்றை வழங்குவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை என்னால் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்
#### 1.5.1 கணக்கீட்டு குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2025 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா.107,000 தொகையான சர்வதேச பராஒலிம்பிக் குழுக்கான (IPC) உரிமைக் கட்டணம் மீளாய்வாண்டிற்கான ஓர் செலவாக அடையாளம் காணப்பட்டது. இதனால், ஆண்டின் மிகையானது ரூபா.107,000 தொகையினால் குறைத்து மதிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது, திருத்தப்படும் | கணக்காண்டிற்கான செலவுகள் சரியாக இனங்கானப்பட்டு கணக்குகளில் பதிவிடப்படல் வேண்டும் |

#### 1.5.2 கணக்காய்வுக்கான ஆவணச் சான்றுகளிண்மை

| உருப்படி | தொகை ரூபா. | சான்றுகளிண்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| 13 இணையவழி கொடுப்பனவுகள் | 20,862,767 | கொடுப்பனவுகளுக்கான உறுதிச்சீட்டுக்கள் | நாங்கள் உறுதிச்சீட்டுக்களைத் தயாரித்திருந்தபோதிலும், அவற்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியவில்லை. | கொடுப்பனவுகளின் சரியான தன்மையை மதிப்பிடுவதற்கு அனைத்து ஆவண ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவை தொடர்பான குறிப்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1973ஆம் ஆண்டின் 25ஆம் இலக்க விளையாட்டுச் சட்டத்தின் பகுதி V இன் 40வது பிரிவு | மீளாய்வாண்டில் வெளிநாடுகளில் நடைபெற்ற 16 சர்வதேச போட்டிகளில் வீரர்கள் பங்கேற்றிருந்தனர். எனினும், 10 போட்டிகளுக்கு விளையாட்டு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்படவில்லை. | பதில் எதுவும் வழங்கப்படவில்லை | சம்மேளனம் விளையாட்டு விதிமுறைகளுடன் இணங்க வேண்டும். |
| (ஆ) 2024 மே 03 திகதியிடப்பட்ட 2382/32 ஆம் இலக்க விசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க தேசிய விளையாட்டு சங்க விதிமுறைகளின் பகுதி II இன் 3 (1) (ii)வது பிரிவு | தற்போதைய சர்வதேச தர நிலையை மேம்படுத்துவதற்கான யுத்திகள், தொடர்புடைய காலத்திற்குள் எதிர்பார்க்கப்படும் இலக்குகள் மற்றும் செயல்திறனின் நிலை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு கூட்டுத் திட்டத்தை சம்மேளனம் சமர்ப்பிக்க வேண்டும், இந்த விதிமுறைகள் நடைமுறைக்கு வந்த திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் விளையாட்டு பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்க வேண்டும். இருப்பினும், சம்மேளனம் அவ்வாறு மேற்கொள்ளத் தவறிவிட்டது. | சம்மேளனம் கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றது | சம்மேளனம் விளையாட்டு விதிமுறைகளுடன் இணங்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சம்மேளனத்தின் மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 2,188,855 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 2,229,145 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,418,000 ஆன பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. முந்தைய ஆண்டை விட விளையாட்டு நிகழ்வுகளின் செலவுகள் ரூ.15,946,773 ஆல் அதிகரித்தமையே இப்பின்னடைவிற்கு காரணமாக இருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிர்வாகக் குழுவின் அங்கீகாரத்துடன், மீளாய்வாண்டில், ரூபா.1,002,258 பெறுமதியுள்ள வில்வித்தை உபகரணங்கள் கணக்கு ஏடுகளிலிருந்து நீக்கப்பட்டிருந்தன. இருப்பினும், ஒவ்வொரு பொருளினதும் வகை, அளவுகள், கிரயம் ஆகியவற்றின் விளக்கம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த உபகரணம் தற்பொழுது பயன்படுத்த இயலாத நிலையில் காணப்படுகின்றது | சொத்துக்களை பதிவழிப்பதற்கு முன்னர் தேவையாக விடயங்கள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படவேண்டும் |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சினால் வெளியிடப்பட்ட 2024ஆம் ஆண்டுக்கான தேசிய விளையாட்டு நாட்காட்டியின் படி, மீளாய்வாண்டில் 18 சர்வதேச போட்டிகளை நடத்த திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அவற்றில் 5 சர்வதேச போட்டிகள் திட்டமிட்டபடி நடாத்தப்படவில்லை. | எதிர்பார்த்த முடிவுகள் அடையப்படவில்லை. ஆதலால், திட்டமிட்டபடி சர்வதேச போட்டிகள் நடாத்தப்படவில்லை. | சம்மேளனம் திட்டமிட்டபடி போட்டிகளை எவ்வித பிழையுமின்றி நடாத்த வேண்டும். |